




# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



செவ்வாய், ஆகஸ்ட் 24.2021 மலர்:08 இதழ்:06


# தமிழகத்தில் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு நீட்டிப்பு

## புதிய தளர்வுகள் என்னென்ன?..முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவிப்பு!

### தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கை வரும் செப்டம்பர் மாதம் 6ஆம் தேதி வரை நீட்டித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு



தமிழ்நாட்டில் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கை வரும் செப்டம்பர் மாதம் 6 ஆம் தேதி வரை நீட்டித்து முதலமைச்சர் மு . க ஸ் டா லி ன் உத்தரவிட்டுள்ளதாக, தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தமிழ்நாட்டில் வரும் ஆகஸ்ட் 23 ஆம் தேதி முதல் 50% பார்வையாளர்களுடன் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி திரையரங்குகள் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. திரையரங்க பணியாளர்கள் அனைவருக்கும் தடுப்பூசி போடப்பட்டிருப்பதை உரிமையாளர்கள் உறுதிச் செய்ய வேண்டும். ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு பொது பேருந்து போக்குவரத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வரும் செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் சுழற்சி முறையில், 9,10,11,12 ஆம் வகுப்புகளுக்கு பள்ளிகளைத் திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் மத்திய உணவுத் திட்டமும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு செப்டம்பர் 15 ஆம் தேதிக்கு பின் பள்ளிகளைத் திறப்பது பற்றி ஆலோசனைக்கு பின் அறிவிக்கப்படும். அதேபோல், செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் அனைத்து கல்லூரிகளிலும் சுழற்சி முறையில் வகுப்புகளை நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது. அனைத்து பட்டயப்படிப்பு வகுப்புகளும் 50% மாணவர்களுடன் சுழற்சி முறையில் நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும்.தங்கும் விடுதிகள், கேளிக்கை விடுதிகளில் மதுக்கூடங்கள் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கடற்கரைகளில் பொதுமக்கள் அனுமதிக்கப்படுவார்கள். கடற்கரைகளில் அமைந்துள்ள கடைகளின் பணியாளர்கள், சிறு வியாபாரிகள் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவை நிறுவனங்கள் 100 % பணியாளர்களுடன் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. உயிரியல் பூங்காக்கள், தாவரவியல் பூங்காக்கள், படகு இல்லங்கள் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இரவு 09.00 மணி வரை செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ள கடைகள், இனி இரவு 10.00 மணி வரை செயல்படலாம். தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், மகளிர் மேம்பாட்டு கழகம் மூலம் நடத்தப்படும் வேலை வாய்ப்பு பயிற்சிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நீச்சல் குளங்கள்இ விளையாட்டு பயிற்சிகளுக்காக மட்டும் 50% பயிற்சியாளர்களுடன் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வழிகாட்டு நெறிமுறைகளுடன் மழலையர் காப்பகங்கள் செயல்பட அனுமதிக்கப்படும்.மதிய உணவு வழங்குவதற்காக செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் அங்கன்வாடி மையங்கள் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அரசின் கரோனா விதிகளைப் பின்பற்றாத நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளில் அத்தியாவசிய செயல்பாடுகளுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளில் தொற்று பரவலை வீடு வீடாகக் கண்காணிக்க குழுக்கள் அமைக்கப்படும். அரசின் தளர்வுகளை மக்கள் முழுப் பொறுப்புணர்வுடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் எதிர்காலம்இ மாணவர்களின் கல்வி, எதிர்காலம் பாதிக்கப்படாதவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோடநாடு வழக்கு – புதிய மனு



கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, சசிகலா உள்ளிட்டோரை விசாரிக்க அனுமதி மறுத்து, நீலகிரி நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் கோடநாடு எஸ்டேட்டில் 2017 ம் ஆண்டு ஏப்ரல் 23 ம் தேதி நள்ளிரவில், ஓம் பஹதூர் என்ற பாதுகாவலரைக் கொலை செய்து, ஆவணங்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக, ஷோலூர் மட்டம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக, நீலகிரி அமர்வு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக, முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, சசிகலா, இளவரசி, சுதாகரன், நீலகிரி முன்னாள் ஆட்சியர் சங்கர், முன்னாள் எஸ்.பி.முரளி ரம்பா, அதிமுக நிர்வாகி சஜீவன், கோடநாடு எஸ்டேட் மேலாளர் நடராஜன், சுனில் ஆகியோரை விசாரிக்க அனுமதி கோரி, வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தீபு, சதீசன், சந்தோஷ் சாமி ஆகியோர், நீலகிரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். இந்த மனுவை விசாரித்த நீலகிரி நீதிமன்றம், எஸ்டேட் மேலாளர் நடராஜனை மட்டும் விசாரிக்க அனுமதி அளித்ததுடன், மற்றவர்களை விசாரிக்கக் கோரிய மனுவைத் தள்ளுபடி செய்து கடந்த ஏப்ரலில் உத்தரவிட்டது. இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி, தீபு, சதீசன், சந்தோஷ் சாமி ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். அதில், இந்த வழக்கில் முன்னாள் முதல்வரின் தொடர்பு குறித்து சயான் பேசியுள்ள நிலையில், அதன் தீவிரத்தைப் பரிசீலிக்க நீலகிரி நீதிமன்றம் தவறிவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஜெயலலிதாவின் மரணத்துக்குப் பின் நடந்த கொள்ளையில், கோடநாடு எஸ்டேட்டில் இருந்து காணாமல் போன பொருட்கள் எவை என்பது பற்றி சசிகலா, இளவரசிக்குத்தான் தெரியும் எனவும், புலன் விசாரணைக் குழு, வெளிப்படையான விசாரணையை மேற்கொள்ளவில்லை எனவும், முக்கியக் குற்றவாளிகளை விட்டுவிட்டதாகவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காபூலில் இருந்து இந்தியர்கள் உட்பட 168 பேர் மீட்பு.!



ஆப்கானிஸ்தான் நாட்டைக் கைப்பற்றியுள்ள தலிபான்கள், அந்த நாட்டில் போர் நிறைவுபெற்றுள்ளதாக அறிவித்துள்ளதோடு, அங்கு தங்களது ஆட்சியை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் புதிய அதிபராக பொறுப்பேற்கவுள்ளதாக கூறப்படும் தலிபான் இணை நிறுவனர் முல்லா அப்துல் கனி பராதர், காபூலுக்கு விரைந்துள்ளார். இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் இருந்து 107 இந்தியர்கள் உட்பட மேலும் 168 பேரை இந்தியா மீட்டுள்ளது. இந்தியர்கள் உட்பட 168 பேருடன் புறப்பட்ட இந்திய விமானப்படை விமானம் உத்தரப்பிரதேசத்தின் காஸியாபாத்தில் தரையிறங்குகிறது. காஸியாபாத் விமானப்படை தளத்தில் இருந்து பின்னர் மீட்கப்பட்ட 168 பேரும் டெல்லி அழைத்துச் செல்லப்பட உள்ளனர் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

## பேனர் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வையுங்கள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின்



தமிழகத்தில் பேனர் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பேனர் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இது போன்ற விரும்பத்தகாத, கண்டிக்கத்தக்க செயல்கள் தொடர்வது என்னை வருத்தமடைய வைக்கிறதுபேனர் கலாச்சாரத்தால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதுடன் சில நேரங்களில் உயிரிழப்பும் ஏற்படுகிறது. என் வேண்டுகோளைக் கட்டளையாக ஏற்று செயல்படுத்தக் கோருகிறேன், எனத் தெரிவித்துள்ளார்.


அகர முதல கவிதைக்களம்

250-க்கும் மேற்பட்ட கவிஞர்கள், தினம் 70-க்கும் மேற்பட்ட படைப்புகள், வாரம் 20-ம், மாதம் 50க்கும் மேற்பட்ட புத்தகப்பரிசுகளும், சான்றிதழ்களும்,

என்றும் தமிழ்ப்பணியில்: அகரமுதல இலக்கிய பேரவை மற்றும் சிவம் அறக்கட்டளை-முகையூர். தொடர்புக்கு: 9597887847

RNI No: 2019098444



# மதுரை ஆதீனத்தின் 293 வது ஆதீனமாக ஹரிஹர தேசிக பரமாச்சாரியா சுவாமிகள் மடாதிபதியாகப் பொறுப்பேற்றார்!



293 வது மதுரை ஆதீனத்திற்கு பீடரோகன நிகழ்வு விமர்சையாக நடைபெற்றது. மடத்தில் தினசரி அன்னதானம், ஆதீனத்திற்கு சொந்தமான கோவில்களில் திருப்பணிகள், மீனாட்சியம்மன் கோவிலில் தினசரி உஷாபிஷேகம் உள்ளிட்ட ஆறு உத்தரவுகளில் கையெழுத்திட்டார். திருஞான சம்பந்தரால் தோற்றுவிக்கப்பட்ட மதுரை ஆதீனத்தின் 292 வது பீடாதிபதியாக இருந்து வந்த ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பராமாச்சாரிய சுவாமிகள் கடந்த ஆகஸ்ட் 13 ஆம் தேதி உடல்நலக்குறைவால் காலமானார். இதனையடுத்து, அவரது உடல் ஆதீன நடைமுறைப்படி முனிச்சாலை பகுதியில் உள்ள மதுரை ஆதினத்திற்கு சொந்தமான இடத்தில் அமர்ந்த நிலையில் அடக்கம் செய்யப்பட்டது. 292 வது மதுரை ஆதினமான அருணகிரிநாதர் காலமான நிலையில், கடந்த ஆகஸ்ட் 14 ஆம் தேதி தருமை ஆதீனம் ஞானாசிரிய அபிஷேகம், கிரியாவிதிகள் ஹோமங்கள் செய்து 293 வது மதுரை ஆதினமாக ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் நியமனம் செய்யப்பட்டார். இந்நிலையில் 10 நாட்களின் முடிவாக 23.08.2021 முனிச்சாலை பகுதியில் 292— வது ஆதீனம் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் குருபூஜை நடத்தப்பட்டது. இதனையடுத்து, மதுரை ஆதினத்தின் 293 வது ஆதீனமாக மதுரை ஆதின மடத்தில் உள்ள பீடத்தில் அமரும் ஞான பீடாரோகன நிகழ்வு தருமைபுர ஆதினத்தின் 27 வது குரு மகாசன்னிதானம் கைலை மாசிலாமணி தேசிக ஞானதேசிக சுவாமிகள் முன்பாக நடைபெற்றது. இதனை தொடர்ந்து மதுரை ஆதீனத்தின் சார்பில் விடுப்பட்டு போன மதுரை மீனாட்சியம்மன் கோவில் உஷாகால கட்டளைகள் தொடர்ந்து நிறைவேற்றப்படும். மதுரை ஆதீன திருமடத்தில் நித்ய பூஜைஇ மாகேஸ்வர பூஜை மற்றும் அன்னதானம் வழங்கப்படும். மதுரை ஆதீனத்திற்கு சொந்தமான நான்கு கோவில்களிலும் தினசரி நித்யபடி பூஜைகள் நடத்தப்படவும், குடமுழக்கு உள்ளிட்ட திருப்பணிகளை விரைவுப்படுத்த வேண்டும் உள்ளிட்ட 6 உத்தரவுகளில் கையெழுத்திட்டுள்ளார். இந்த நிகழ்வில் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதினம், பேரூர் ஆதினம், சிரவை ஆதினம் உள்ளிட்ட பல்வேறு மடங்களின் ஆதினங்கள் சார்பிலும் மதுரை மீனாட்சியம்மன் கோவில் சார்பிலும் மரியாதை செலுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து ஏராளமான பொதுமக்கள் ஆசிப் பெற்று சென்றனர். பீடத்தில் அமர்ந்த பின் மதியம் 01.30 மணியளவில் மாகேஸ்வர பூஜையும்இ இன்று மாலை மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில் வழிபாடும், அதனையடுத்து குருமூர்த்த சிறப்பு வழிபாடும், தொடர்ச்சியாக இரவு 08.00 மணிக்கு மேல் பட்டினப்பிரவேசமும் கொலுக்காட்சி நடைபெற்றது.மதுரை ஆதின மடத்தின் 293 வது ஆதினமாக பொறுப்பேற்கும் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த காந்திமதிநாதன் பிள்ளை— ஜானகி அம்மை தம்பதியினருக்கு 25.03.1954 ல் மகனாக பிறந்தார். இவரது இயற்பெயர் பகவதிலட்சுமணன். தனது 2 வது வயதில் குன்றக்குடி ஆதீனத்தில் ஆறுமுகத்தம்பிரானாகவும், 1976 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை தருமையாதீனத்தில் நெல்லையப்பத் தம்பிரானாகவும், 1980 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை திருவாவடுதுறை ஆதீனத்தில் சுந்தரமூர்த்தித் தம்பிரானாக 39 ஆண்டுகள் பணியாற்றி வந்தார்கள்.மதுரை ஆதீனத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் தேதி ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாதரால் சமய, விசேஷ நிர்வாண தீட்சை செய்து ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் என பெயர் சூட்டப்பட்டு இளைய ஆதீனமாக அறிவிக்கப்பட்டிருந்தார்.

# கொடநாடு விவகாரம்..பேரவையில் விவாதிக்கக் கூடாது முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்



கொடநாடு கொலை மற்றும் கொள்ளை குறித்த வழக்கில் மறுவிசாரணை நடத்தப்படுகிறது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சயானிடமிருந்து வாக்குமூலம் வாங்கியிருக்கிறது தமிழ்நாடு காவல்துறை. அந்த வாக்குமூலம் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு சிக்கலை ஏற்படுத்துகிறது. அதனால், அவர் பதறி துடிக்கிறார். தனக்கு எதிரான திமுக அரசின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த தமிழ்நாடு கவர்னர் பன்வாரிலாலை சந்தித்து கோரிக்கை வைத்துள்ளார் எடப்பாடி பழனிசாமி. இந்த நிலையில், கொடநாடு விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவர காங்கிரஸ் தரப்பில் சபாநாயகரிடம் மனு தரப்பட்டுள்ளது. அதன்படி, பேரவையில் இந்த விவகாரம் எதிரொலிக்கும் என தெரிகிறது. இந்தச் சூழலில், இதுகுறித்து பேசியுள்ள முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், இந்தக் கொடநாடு விவகாரம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது, சட்டப்பேரவை விதி 55 ன்படி விவாதிக்கக் கூடாது, விவாதிக்க முடியாது. எதிர்க்கட்சித் தலைவரை முடக்குவதற்கான சதி இது. இதைப் பேரவையில் விவாதிப்பது உரிமை மீறலாகும். கொடநாடு விவகாரத்தில் அதிமுகவுக்கு எந்தப் பயமும் கிடையாது, என்று கூறியிருக்கிறார்.

# மணிப்பூர் ஆளுநராக பாஜக மூத்த தலைவர் இல.கணேசன் நியமனம்..!



பாஜக மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இல.கணேசன் மணிப்பூர் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை இந்திய குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் பிறப்பித்துள்ளார்.அண்மையில் தமிழக பாஜக தலைவராக இருந்த எல்.முருகன் மத்திய இணை அமைச்சராக தேர்வு செய்யப்பட்டதையடுத்து தமிழக பாஜக தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட்டிருந்தார்.இந்நிலையில் மணிப்பூர் ஆளுனராக தமிழக பாஜக மூத்த தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இல. கணேசன் நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே தமிழக பாஜக தலைவராக இருந்த தமிழிசை சவுந்தரராஜன் தெலுங்கானாவின் ஆளுநராகவும், புதுச்சேரியின் துணைநிலை ஆளுநராகவும் நியமிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கொட்டித்தீர்த்த மழை: மகிழ்ச்சியில் மக்கள்



வளிமண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் வெப்பச்சலனம் காரணமாக டெல்டா மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளில் பலமணி நேரமாக மழை பெய்துவருகிறது. குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்கு ஆயத்தமாக இருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தாலும், அறுவடைக்காகக் காத்திருக்கும் விவசாயிகள் வேதனையில் உறைந்துள்ளனர். தமிழ்நாட்டில் சில நாட்களாக மழை பெய்துவருகிறது. வளிமண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் வெப்பச்சலனம் காரணமாக தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை மையம் அறிவித்திருந்தது. அதன்படியே 22.08.2021 நாகை, திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் காலையில் வெயில் வாட்டிவந்த நிலையில், பகல் 11 மணிக்கு மேல் சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக மழை கொட்டித்தீர்த்தது. வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருந்த நிலையில் பெய்த பலத்த மழையால் குளிர்ந்த சூழல் நிலவுகிறது. மேலும், முன்குறுவை சாகுபடி செய்து அறுவடைக்காகக் காத்திருக்கும் விவசாயிகள் மழையினால் பயிர்கள் தண்ணீரில் சாய்ந்து கிடப்பதைக் கண்டு வேதனை அடைகின்றனர். அதேநேரம், பின்குறுவை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளோ பயிர்களுக்குப் பொருத்தமான மழை என மகிழ்கின்றனர். இதேபோல் சம்பா சாகுபடி தொடங்கியுள்ள விவசாயிகளும் மழைப் பொழிவினால் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை தொடக்கம்



அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 23 ஆம் தேதி முதல் மாணவர் சேர்க்கை கலந்தாய்வைத் தொடங்குமாறு கல்லூரிக்கல்வி இயக்ககம் உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாட்டில் 143 அரசு கலை, அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுவருகின்றன. இக்கல்லூரிகளில் சேர ஏற்கனவே விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்நிலையில், நடப்புக் கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைக் கலந்தாய்வை 23 ஆம் தேதிமுதல் தொடங்க கல்லூரிக்கல்வி இயக்ககம் உத்தரவிட்டுள்ளது. செப்3 ஆம் தேதிக்குள் மாணவர் சேர்க்கையை நடத்தி முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கரோனா தொற்றின் தாக்கத்தைப் பொருத்து அந்தந்தக் கல்லூரி முதல்வர்கள் ஆன்லைன் அல்லது நேரடி கலந்தாய்வு மூலம் மாணவர் சேர்க்கை நடத்திக்கொள்ள வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. பிளஸ் 2 மதிப்பெண் சான்றிதழ், இதர சான்றிதழ்களைச் சரிபார்த்த பின்னரே சேர்க்கையை உறுதிசெய்ய வேண்டும் எனவும்இ சேர்க்கையின்போது வன்னியர்களுக்கான 10.5 சதவீத உள் இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும் என்றும் கல்லூரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

அகர முதல
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு





# அகர முதல

Aagaramuthalaa
மின்னிதழ்
www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், ஆகஸ்ட் 24.2021 கடலூர் மலர்:08 இதழ்:06

# கடலூர் மாவட்ட செய்திகள்

## கொரோனா விழிப்புணர்வு வாகனத்தை
## கடலூர் மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



கடலூர் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் கொரோனா விழிப்புணர்வு வாகனத்தை கடலூர் சட்டமன்ற உறுப்பினர் அய்யப்பன் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் பாலசுப்ரமணியம் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இவ்விழிப்புணர்வு வாகனம் சென்னையில் உள்ள மத்திய அரசின் மண்டல மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் 75 ஆவது இந்திய சுதந்திர பெருவிழா மற்றும் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழகம் முழுவதும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது. இந்த விழிப்புணர்வு வாகனம் 22.08.2021 மற்றும் 23.08.2021 கடலூர் மாவட்டத்தில் கடலூர், வடலூர், நெய்வேலி, விருத்தாசலம், பெண்ணடம், சேத்தியாதோப்பு, காட்டுமன்னார்கோயில், குமராட்சி, சிதம்பரம் மற்றும் புவனகிரி ஆகிய பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குறும்படங்கள் திரையிட உள்ளது. முன்னதாக, கடலூர் டவுன்ஹாலில் மாவட்ட நேரு யுவகேந்திரா மற்றும் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் இணைந்து இந்திய சுதந்திர தின 75 ஆவது ஆண்டு ஆரோக்கிய இந்திய சுதந்திர தின ஓட்டம் 2.0 நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் கி.பாலசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், ஆரோக்கிய இந்திய சுதந்திர தின ஓட்டம் 2.0 மாவட்ட ஆட்சியர் கி.பாலசுப்ரமணியம் தலைமையில் அனைவராலும் உறுதி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, ஆரோக்கிய இந்திய சுதந்திர தின ஓட்டம் 2.0 ஓட்டத்தினை கொடியசைத்து துவக்கி வைத்து தானும் பங்கு பெற்றார். இவ்விழிப்புணர்வு ஓட்டம் கடலூர் டவுன்ஹாலில் இருந்து வெள்ளி கடற்கரை சாலையில் உள்ள இந்திய மருத்துவ கழகம் வரை அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், எஸ்.பி.சி.சக்திகணேசன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி) பவன்குமார் ஜி.கிரியபப்னவர், வருவாய் கோட்டாட்சியர் அதியமான் கவியரசு, இணை இயக்குனர் நலப்பணிகள்) ரமேஷ் பாபு, துணை இயக்குனர் சுகாதரம்) மீரா, வட்ட விளையாட்டு நல அலுவலர் சிவா,நேரு யுவகேந்திரா மாவட்ட இளைஞர் அலுவலர் ரிஜேஷ் குமார், மாவட்ட நாட்டு நலப்பணி திட்ட தொடர்பு அலுவலர் திருமுகம், மக்கள் தொடர்பு அலுவலக துணை இயக்குனர் முனைவர் சிவகுமார், தன்னார்வலர்கள், நாட்டு நலப்பணி திட்ட தொண்டர்கள், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## குறுவை பருவத்துக்கு பயிர்க் காப்பீடு செய்யாவிட்டாலும் இழப்பீடு
## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்



நிகழ் குறுவை பருவ நெல் பயிர்களுக்கு விவசாயிகள் காப்பீடு செய்யவில்லை என்றாலும், சேதம் ஏற்பட்டால் உரிய இழப்பீடு வழங்கப்படும் என மாநில வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கூறினார். வேளாண்மைத் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து தமிழக அரசு புதிய வரலாறு படைத்துள்ளது. இதற்காக முதல்வருக்கு நன்றி, சிலர் அரசுக்கு அவப்பெயா ஏற்படுத்தும் நோக்கில் வேளாண் நிதிநிலை அறிக்கையை விமர்சிக்கின்றனர் நிகழ் குறுவை நெல் சாகுபடி பருவத்துக்கான காப்பீடு ஏன் அறிவிக்கப்படவில்லை எனக் கேட்கின்றனர். காப்பீட்டு நிறுவனத்தை தேர்வு செய்ய வேண்டியது தொடர் நடவடிக்கையாக அமைய வேண்டும், முந்தைய அதிமுக அரசு அதற்கான முயற்சியை எடுக்கவில்லை. இதனால், நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் காப்பீட்டு நிறுவனத்தை தேர்வு செய்வதற்காக முறை ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.இதை இறுதி செய்வதற்கான கால அவகாசத்துக்குள் 4.90 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுவிட்டது.இதில் இதுவரை 54 ஆயிரம் ஏக்கா பரப்பளவில் நெல் அறுவடை செய்யப்பட்டு, 3.27 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. காவிரி டெல்டா பகுதியில் 655 நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்த 20 நாள்களில் குறுவை சாகுபடிக்கான அறுவடையே முடிந்துவிடும். எனவே, இனிமேல் குறுவை நெல் சாகுபடிக்கான காப்பீடு தேவைப்படாது. எனினும், காப்பீடு இல்லாவிட்டாலும் இயற்கை இடர்பாடுகளால் சேதம் ஏற்பட்டால் உரிய இழப்பீடு வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்துள்ளாா். 2020 2021 ஆம் ஆண்டில் சம்பா பருவத்தில் நெல் உள்பட பல்வேறு பயிர்களுக்கு மாநில அரசு செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தொகை பிரீமியம் ரூ.1.248,92 கோடி கடந்த 16 ஆம் தேதி விடுவிக்கப்பட்டது. கரும்பு விவசாயிகளுக்கு கூட்டுறவு சா க்கரை ஆலைகள் வைத்துள்ள நிலுவைத் தொகையில் ரூ.220 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மற்ற பயிர்களுக்கு காப்பீட்டுத் தொகை செலுத்த வருகிற 31 ஆம் தேதி கடைசி நாளாகும், இதை கால நீட்டிப்பு செய்ய வாய்ப்பில்லை.தனியார் சா்க்கரை ஆலைகள் சுமார் ரூ.1,500 கோடி வரை பாக்கி வைத்துள்ளன. விரைவில் முத்தரப்புக் கூட்டம் நடத்தப்பட்டு பாக்கித் தொகையை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும். கூட்டுறவு கடன் சங்கங்களில் வழக்கம்போல அனைத்து கடன்களும் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் உரத்துக்கு தட்டுப்பாடு இல்லை என்றார் அவர். அப்போது, மாவட்ட ஆட்சியர் கி.பாலசுப்பிரமணியம், காவல் கண்காணிப்பாளார் சி.சக்திகணேசன், சட்டப்பேரவை உறுப்பினர் கோ.ஐயப்பன், திமுக நிர்வாகிகள் பி.பாலமுருகன், கே.எஸ்.ராஜா, சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## நெய்வேலியில் என்எல்சி 2 ஆவது சுரங்கத்தில் சுற்றுச்சூழல் பூங்கா



மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் பொதுத் துறை நிறுவனங்கள் ஆண்டுதோறும் விருட்சரோபன் அபியான் என்ற பெயரில் மரக்கன்றுகள் நடும் விழாவை நடத்தி வருகின்றன. இதன்படி நிகழாண்டுக்கான விழா வியாழக்கிழமை நடைபெற்றது. மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி புதுதில்லியில் மரக்கன்று நட்டு விழாவை தொடக்கிவைத்தார். இதையொட்டி, நிலக்கரி, பழுப்பு நிலக்கரி கிடைக்கும் 300 இடங்களில் ஒரே நேரத்தில் முக்கியப் பிரமுகர்கள் மரக்கன்றுகளை நட்டனர்.இந்த விழாவில், நெய்வேலி மற்றும் சிங்ரோலியில் அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் பூங்காக்களை அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி திறந்துவைத்தார். மேலும், மேற்கு வங்கத்தில் அமையவுள்ள ஐஞ்ஜ்ரா, ஒடிஸாவில் அமையவுள்ள சந்திரசேகர், ஆசாத் பூங்காக்களுக்கும் அடிக்கல் நாட்டினார், நிகழ்ச்சியில் இணை அமைச்சர் ராவ் சாஹீப் பாட்டீல் தன்வே, நிலக்கரி அமைச்சக செயலா் அனில் குமார் ஜெயின், கூடுதல் செயலர் வினோத் திவாரி ஆகியோர் பங்கேற்றனர்.இந்தத் திட்டத்தின்கீழ் என்எல்சி இந்தியா நிறுவனம் சார்பில் 2,41,200 மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டு, சுரங்கங்கள், நகரியப் பகுதி, பிற இடங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, அருப்புக்கோட்டை, பார்சிங்சர் தலபிரா, கதாம்பூர் ஆகிய இடங்களில் 1,08,400 மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும், 1,32,800 மரக்கன்றுகள் ஊழியர்கள்,பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.உத்தரப்பிரதேச மாநிலத்தில் என்எல்சி இந்தியா நிறுவனத்தின் கதாம்பூர் மின்நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் நிறுவனத் தலைவா் ராகேஷ்குமாா், மின்துறை இயக்குநர் ஷாஜி ஜான் ஆகியோர் பங்கேற்றனர்.

## பண்ருட்டி குப்பைகளை சேகரிக்கும் வாகனங்கள் மக்கும் அவலம்



பண்ருட்டி நகராட்சியின் பின்புறத்தில், வாகனங்கள் மண்ணில் புதைந்தபடி காணப்படுகிறது. மேலும் குப்பைத் தொட்டிகளும் பயனற்றுக் கிடக்கின்றன. இதனை உடனடியாக ஏலம் விட்டால் அரசுக்கு வருவாய் கிடைக்கும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பண்ருட்டி நகராட்சிக்கு ஆணையர் இல்லாததால், பல்வேறு பணிகள் முறையாக நடைபெறுவதில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் பண்ருட்டி நகராட்சி ஆணையரை நியமனம் செய்யவேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளனர்.இது குறித்து நகராட்சி நிர்வாகத்திடம் கேட்டபோது, குப்பைகளை சேகரிக்க எட்டு லாரிகள் 23 பேட்டரி வாகனங்கள் தற்போது பயன்பாட்டில் இருப்பதாகவும், 25 ஆண்டுகள் பழமையான வாகனங்கள்தான் வீணாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பழைய வாகனங்களின் ஆவணங்கள் குறித்து ஆய்வுசெய்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## சிதம்பரத்தில் வீரனார் கோவிலை
# இடித்ததை கண்டித்து பொதுமக்கள் போராட்டம்



சிதம்பரம் சபாநாயகர் தெருவில் உள்ள அரசு நந்தனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி முன்பு பழமை வாய்ந்த வீரனார் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவில், அதே பகுதியில் உள்ள மவுன சுந்தரமூர்த்தி சுவாமிகள் மடத்திற்கு சொந்தமான இடத்தில் இருந்ததாகவும், மடத்திற்கு சொந்தமான கோவில் என்றும் கூறப்படுகிறது. இந்த நிலையில் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து வீரனார் கோவில் கட்டப்பட்டுள்ளதாக கூறி நேற்று காலை நெடுஞ்சாலைத் துறையினர், வருவாய்த் துறையினருடன் சேர்ந்து பொக்லைன் எந்திரம் மூலம் வீரனார் கோவிலை இடித்து அகற்றினர். இதுபற்றி அறிந்த அப்பகுதி மக்கள் மற்றும் இந்து முன்னணியினர் கோவில் இருந்த இடத்திற்கு திரண்டு வந்தனர். பின்னர் அவர்கள், கோவிலை இடித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் மடத்திற்கு அதிபரான மவுன சுந்தரமூர்த்தி சுவாமிகள், இடிக்கப்பட்ட கோவில் முன்பு அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார். இதுகுறித்து தகவல் அறிந்த சிதம்பரம் நகர இன்ஸ்பெக்டர் ஆறுமுகம், தாசில்தார் ஆனந்த் மற்றும்அதிகாரிகள் விரைந்து சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சமாதானப்படுத்தினர். அப்போது பொதுமக்கள், கோவில் இருந்த இடம் மடத்திற்கு சொந்தமானது என்று கூறி, வீரனார் சாமி சிலையை இடித்த இடத்திலேயே மீண்டும் வைத்தனர். தொடர்ந்து மவுன சுந்தரமூர்த்தி சுவாமிகள், வீரனார் சுவாமிக்கு அபிஷேகம் செய்து வழிபட்டார். இதையடுத்து அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்றனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# கடலூர்: விதிமுறை மீறல்: படகு உரிமையாளர்கள் மீது வழக்கு



கடலூர் மாவட்டத்தில் விதிமுறை மீறலில் ஈடுபட்டதாக 4 படகுகளின் உரிமையாளர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டத்தில் மீனவர்களிடையே ஏற்படும் தொழில் தகராறுகளுக்கு தீர்வு காணும் வகையில் அமைதிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, கடல் சார் மீன்பிடி தொழிலில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இதில், விசைப்படகுகள் மூலமாக மீன்பிடிப்போர் காலை 5 மணிக்கு தங்குதளத்தில் இருந்து புறப்பட்டு மீன்களை பிடித்துக் கொண்டு மாலை 6 மணிக்குள் திரும்ப வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த, உத்தரவு நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கடலூர் கோட்டாட்சியர் அதியமான் கவியரசு, துணை கண்காணிப்பாளர் கரிகால் பாரிசங்கர் கொண்ட குழுவினர் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை வரையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது, குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக வந்து சென்றதாக முதுநகரைச் சேர்ந்த இப்ராஹிம் மகன் கமால், தைக்கால்தோணித் துறையைச் சேர்ந்த அ.பிரசாத்,பெரிய குப்பத்தைச் சேர்ந்த அ.மூர்த்தி, தேவனாம்பட்டினத்தைச் சேர்ந்த கோ.சீத்தாராமன் ஆகிய 4 பேர் மீது கடல்சார் மீன்பிடி ஒழுங்குப்படுத்துதல் சட்ட விதிகளை மீறியதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதன் மூலமாக 4 படகின் உரிமையாளர்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும், அவர்களது படகுகளுக்கு வழங்கப்படும் எரிபொருள் மானியத்திற்கு தடை விதித்தும் உத்தரவிடப்பட்டது.

## கடலூர்: தாயிடம் பால் பெறமுடியாமல் அவதியுறும்
# அரையடி கன்றுக்குட்டி



அரை அடி உயரத்தில் கன்றுக் குட்டியை ஈன்றுள்ளது கடலூர் பகுதியை சேர்ந்த ஒரு பசு, இந்த கன்றுக்குட்டி, உயரம் குறைவாக இருப்பதால், தாயிடம் பால் குடிக்க முடியாமல் தவித்துவருகிறது. கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே நலன் புத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் விஜயன் என்ற விவசாயி, இவர் வீட்டு பசுவொன்று, மூன்றாவது முறையாக கன்று ஒன்றை ஈன்றுள்ளது. இதற்கு குமராட்சி அரசு கால்நடை மருத்துவமனையில் தான் சினை ஊசி போடப்பட்டுள்ளது. அங்குதான் மூன்றாவது கன்று ஈன்றெடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த கன்று உயரம் குறைவாக தரையோடு தரையாக தவழ்ந்து செல்லும் அளவுக்குதான் இருக்கிறது. இதனால் தாய் பசுவிடம் பால் குடிக்க முடியாமலும் நடக்க முடியாமலும் தவித்து வருகிறது கன்று. கன்றை பார்த்து கண்ணீர் வடிக்கிறது தாய்ப்பசு. இதனால் பசுவை வைத்திருக்கும் விவசாயி விஜயன் குடும்பத்தினர் மிகப்பெரிய சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். ஏற்கெனவே இதே பசு இரண்டு கன்றுகளை ஈன்றபோது சரியான அளவில்தான் கன்றுகள் இருந்துள்ளன. ஒருவேளை தற்போது அரசு கால்நடை மருத்துவமனையில் போடப்பட்ட சினை ஊசியில் ஏதேனும் பிரச்னை இருக்குமா என்ற சந்தேகம் விஜயன் குடும்பத்துக்கு எழுந்துள்ளது. தங்கள் கேள்வியை முன்வைக்கும் அவர்கள், கால்நடை துறை இதில் கவனம் செலுத்தி, இந்தக் கன்று வளர்ச்சியடைய அதற்கான வழிவகைகளை செய்து கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் வைக்கின்றனர். இந்த கன்றுக் குட்டியை பார்க்க சுற்றுவட்டார பகுதி மக்கள் அந்த பகுதியில் தொடர்ச்சியாக வந்தவண்ணம் உள்ளனர். குழந்தைகளை விட மிகக் குறைவான உயரத்தில் இருப்பதால் அந்தக் கன்றுக்குட்டி மீது அந்த குடும்பத்தினர் அதிக பாசத்துடன் இருந்துவருகின்றனர்.

## கடலூர்:சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததாக உறவினர்கள் இருவர் போக்சோவில் கைது



14 வயது சிறுமியை தொடர்ச்சியாக பாலியல் வன்கொடுமை செய்ததாக உறவினர் இருவர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அருகே உள்ள கிராமத்தில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் 14 வயது சிறுமி, தாய், தந்தையை இழந்த நிலையில், தனது பாட்டி வீட்டில் தங்கி படித்து வருகிறார். இந்த நிலையில் சிறுமியின் உறவினர்களான ராஜு ராஜ்பாய் (47) மற்றும் சிங்காரவேலு (57) ஆகிய இருவரும் சிறுமியை கட்டாயப்படுத்தி பலமுறை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். இதையடுத்து அந்த சிறுமி அவரது பக்கத்து வீட்டில் உள்ளவர்களிடம் தனக்கு நடந்த கொடுமைகளை கூறி உதவி கேட்டுள்ளார். இதைத்தொடர்ந்து பக்கத்து வீட்டுக்காரர்கள் கடலூர் மாவட்ட சிறுவர் உதவி மையத்தை தொடர்பு கொண்டு சிறுமிக்கு நடந்த அநீதியை தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் சைல்டு ஹெல்ப் லைன் மூலம் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்பட்ட சிறுமியை மீட்டு கடலூர் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், சமூக நலத்துறை அதிகாரிகள் சிறுமிக்கு நடந்த வன்கொடுமையை மாவட்ட காவல் துறைக்கு தெரிவித்தனர். இதையடுத்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரின் உத்தரவின் பேரில் விருத்தாசலம் அனைத்து மகளிர் காவல் துறையினர், ராஜு மற்றும் சிங்காரவேலை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

## கடலூர் அருகே விசைப்படகு என்ஜினில் தீ விபத்து
# நடுக்கடலில் தவித்த கடலூர் மீனவர்கள்



கடலூர் அருகே உள்ள சிங்காரத்தோப்பு மீனவ கிராமத்தை சேர்ந்தவர் வீராசாமி மகன் அன்பு, இவருக்கு சொந்தமான விசைப்படகில் அதிகாலை அதே பகுதியை சேர்ந்த சபரி, செந்தில்குமார், சிங்காரவேல் உள்ளிட்ட 10 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க புறப்பட்டனர். மதியம் 2 மணி அளவில் சென்னை நீலாங்கரை அருகில் சுமார் 7 நாட்டிக்கல் மைல் தொலைவில் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக விசைப்படகின் என்ஜின் திடீரென தீப்பற்றி எரிந்தது. இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த மீனவர்கள் அனைவரும் தீயை அணைத்தனர். இருப்பினும் அந்த விசைப்படகு பழுதாகி நடுக்கடலில் நின்றது. இதனால் சபரி உள்ளிட்ட 10 பேரும் கரைக்கு திரும்ப முடியாமல் நடுக்கடலில் தவித்தனர். பின்னர் அவர்கள், உதவி கேட்டு கடலூர் மீன்வளத்துறை அதிகாரிகள் மற்றும் கடலூர் துறைமுகம் காவல் நிலையத்தை தொடர்பு கொண்டு நடந்த சம்பவம் குறித்து தெரிவித்தனர். அதன் பேரில் துறைமுகம் போலீசார் அளித்த தகவலின் அடிப்படையில் இந்திய கடலோர பாதுகாப்பு படையினரும், சென்னை மெரினா கடலோர பாதுகாப்பு குழுமத்தினரும் மீட்பு படகு மற்றும் ஹெலிகாப்டருடன் நடுக்கடலுக்கு விரைந்து சென்றனர். பின்னர் விசைப்படகுடன் நடுக்கடலில் தவித்த 10 மீனவர்களையும் பாதுகாப்பாக மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். மேலும் பழுதான விசைப்படகை, இந்திய கடலோர பாதுகாப்பு படையினர் தாங்கள் சென்ற கப்பலுடன் கயிறு கட்டி பத்திரமாக கரைக்கு இழுத்து வந்தனர். பின்னர் மீனவர்கள் அனைவரும் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதுதொடர்பாக மீன்வளத்துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையில், கடலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இழு வலைகளை பயன்படுத்த அதிக கட்டுப்பாடுகள் உள்ளதால், அதிகளவில் மீன் பிடிக்கும் நோக்கத்தில் மீனவர்கள் சென்னை அருகே சென்றதும், அப்போது தான் என்ஜினில் தீ விபத்து ஏற்பட்டு நடுக்கடலில் தவித்ததும் தெரியவந்தது.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

அகர முதல
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு